தமிழ்ச் சிட்டு

எவற்றினிலும் நேற்றைவிட இன்றுயர்தல் வாழ்க்கை !

ஓடுநடை, பரபரப்பு,
ஓலங்கள், இரைச்சல்,
தேடுபொருள் நோக்கம்—என்றே
திரிந்தலைதல் வாழ்வா ?

அன்புசெய்தல், அறிவுபெறல்,
ஆழ்ந்து அகலக் கற்றல்,
தின்பதிலும் முறை ஒழுகல்,
தெளிவுபெறல்— வாழ்க்கை !

எண்ணியெண்ணிச் செயப்பழகல்,
இயற்கையிலே தோய்தல்,
பண்ணுவதில் செப்பநுட்பம்
பயன்கருதல்— வாழ்க்கை !

பெற்றநலம் பிறர்க்காக்கல்,
பிறர்நலத்துக் குழைத்தல்,
கற்றவற்றை மற்றவர்க்கும்
கனிந்துதரல்— வாழ்க்கை !

தவற்றினிலும் திருத்தமுறல்,
தாழ்ச்சியின்றி நிற்றல்,
எவற்றினிலும் நேற்றைவிட
இன்றுயர்தல்— வாழ்க்கை !

குரல் : 21
இசை : 9

விலை:
உருபா : 1-50

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

உலக நாடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!

22. இத்தாலி **(ITALY)**—குடியரசு

நிலப்பரப்பு : 3,01,268 ச: அ: மா.
மக்கள் தொகை : 5,69,30,000.
மக். தொ. பெ: (ஆண்டுக்கு) 0.4%
மக். வா. எ: ஆ: 70 ஆண்டு. பெண்: 76 ஆண்டு.
எழுத்தறிவு : 98%
தலைநகர் : ரோம். (Rome)
மொழி : இத்தாலியன்,
நாணயம் : லிரா 100 சென்டிசியன்.

23. யுகோசுலாவியா **(YUGOSLAVIA)**—நிகர்மை கூட்டுறவுக் குடியரசு

நிலப்பரப்பு ; 2,55,804 ச. அ. மா.
மக். தொ. 2,28,50,000
மக். தொ. பெ. (ஆண்டுக்கு): 0.9%
மக். வா. எ: ஆ: 67 ஆண்டு, பெண்: 72 ஆண்டு.
எழுத்தறிவு : 85%
தலைநகர் : பெல்கிரேடு (Belgrade)
மொழி : செர்போ—குரோவாட்டியன், மாசிடோனியன், சிலாவேனியன், அல்பேனியன்.
(Serbo-Groation, Macedonian, Slovenian, Albanian)
நாணயம் : யுகோசுலாவியன் டினர், (100 Para)

24. உரோமானியா **(ROMANIA)**—சமநிலைக் குடியரசு

நிலப்பரப்பு : 2,37,500 ச. அ. மா.
மக்கள் தொகை : 2,26,00,000.
மக். தொ. பெ : 0.9%
மக். வா. எ : ஆண்: 68, பெண்: 73 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 98%
தலைநகர் : புக்காரெஸ்ட் (Bucharest)
மொழி : உரோமானியன்.
நாணயம் : லியு (100 பேனி)

25. போர்ச்சுகல் **(PORTUGAL)**—குடியரசு

நிலப்பரப்பு : 92,082 ச. அ. மா.
மக்கள் தொகை : 99,30,000.
மக். தொ. பெ : 0.9%
மக். வா. எ : ஆண்: 66, பெண்: 74 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 80%
தலைநகர் ; இலியாபோன் (Liabon)
மொழி : போர்த்துகீசு (Portuguese)
நாணயம் : எசுகூடோ (100 சென்டாவோசு)

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்கு நல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்- 21] (தி.பி. 2023) சுறவம் (பிப்ர) 92 [இசை·9

அழுந்திப் பயிலுக !
ஆழ்ந்து உணர்க !!

இக்காலத்தில், பொதுவாக ஒரு கருத்து மக்களிடையில் பரவலாக வழங்கப் பெறுகிறது. அதுவும் அக் கருத்து ஆங்கிலத்தில் கூறப்பெறுகிறது. எதையும் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே அது. Take it easy என்று ஆங்கிலத்தில் சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். ஏதோ ஒரு சிக்கல் வருகிறது. அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றே எல்லாரும் அறிவுரை கூறுகிறார்கள். நமக்கு வரும் சிக்கல், துன்பம், இடர்ப்பாடு—என்றால், அவ்வறிவுரை ஒருவகையில் பொருந்தும். அதுவும் கூட ஓர் ஆயிரம் உருபா நம்மிடத்திலிருந்து காணாமற் போய் விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். "அதையும் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது; எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்; Take it easy" என்று சொன்னால் எப்படி? ஆயிரம் உருபாவை எளிதாக எடுத்துக் கொள்ள முடியுமா? நம் தம்பியோ, பையனோ தேர்வில் குறைந்த எண்களை வாங்கி வருகிறான் என்று கருதிக் கொள்வோம்; அப்பொழுது அதற்காக வருந்தாமல் இருக்க முடியுமா? அல்லது அவனைத்தான் எதுவும் சொல்லாமல் இருந்து விடுவோமா? இவற்றிலிருந்து எதையுமே கடுமையாகவோ அல்லது எளிதாகவோ எடுத்துக் கொள்ளக்

கூடாது; அதனதன் இயல்புக்கேற்ப, சில நிலைகளைக் கடுமையாக மதிக்கவும் வேண்டும்; சில நிலைகளை எளிதாகவும் மதிப்பிடல் வேண்டும். இதுதான் உலகியல் பொருத்தம் உடையது.

திருவள்ளுவர் சொல்வார்,

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர் ;
நெஞ்சத் தவலம் இலர். (1072)

என்று;

அஃதாவது, ''நன்றாகத் தெரிந்து கொள்ளுபவர்களை விட, கயவர்கள் நற்பேறு உடையவர்கள் ; ஏனெனில் அவர்கள் உள்ளத்தில் துயரம் இல்லாதவர்கள்'' —என்று அவர் கூறுவார். நன்றாகத் தெரிந்து கொள்பவர்களுக்கு இவ்வுலகின் துன்ப துயரங்கள், மக்களின் அவலநிலைகள், அறிவின் தாக்கங்கள், சுமைகள் —ஆகியவை நன்றாகத் தெரியும். எனவே அவர்களால் அமைதியாக இருத்தல் இயலாது. மற்றவர்கள் துயரங்கள், அவல நிலைகள் அவர்களை வருத்தும். இன்னும் அறிந்து கொள்ள அறிந்து கொள்ள அவர்களின் சிந்தனைகள் மிகுந்து கொண்டே போகுமாகையால், அவர்கள் அமைதியாகவே இருக்க முடியாது. சிந்தனை மிக மிக இவ்வுலகச் சிக்கல்கள் தெரிய வரும். சிக்கல்கள் தெரியத் தெரிய அவற்றால் உணர்வுத் தாக்கங்கள் ஏற்படும். அவ்வாறு உணர்வுத் தாக்கங்கள் மிக மிக நெஞ்சத்தில் யாரிடமும் சொல்லித் தீர்த்துக் கொள்ள வியலாத துன்பவுணர்வுகள், அவலங்கள் மிகுந்து கொண்டே போகும். இந் நெஞ்சத்துயரங்கள் நன்றாகத் தெரிந்து கொள்ளாத அல்லது தெரிந்து கொள்ள விரும்பாத கீழ்மக்களுக்கு ஏற்பட வாய்ப்பில்லை. எனவே, அவர்கள் தம் விருப்பம் போல் மகிழ்ச்சியாகவே இருப்பர். உள்ளத்தில் அவர்களுக்குத் துன்பம் வருவதில்லை; எனவே அவர்கள் கொடுத்து வைத்தவர்கள். நற்பேறு (அதிர்ஷ்டம்) உடையவர்கள் என்று உயர்வு நவிற்சி தோன்ற இழித்துக் கூறுகிறார் திருவள்ளுவப் பேராசான்.

ஆனாலும் இது பொதுவான ஒரு கூற்றாகும். 'எதையும் எளிதாக எடுத்துக் கொள்' (Take it easy) எதையும் ஆழமாக — பெரிதாக — கடினமாக — கருதிக் கொள்ளக் கூடாது; அவ்வாறு கருதினால், அவர்களை அவற்றால் வரும் துன்பங்கள் தாக்குவதில்லை. இது தான் உலகியல். அஃதாவது எல்லார்க்கும் பொதுவான அறிவுரை.

ஆனால், இவ்வாறு எதையும் மேலோட்டமாக எடுத்துக் கொள்வதானால், அறிவு விளங்காது. ஒரு பொத்தகத்தைப் படிப்பதானாலும் அழுந்திப் படிக்க வேண்டும் ; ஆழமாகவும் படிக்க வேண்டும். மேலோட்டமாகப் படித்தால், அதிலுள்ள கருத்துகள் நன்றாக விளங்காது. விளங்கினாலும் மனத்தில் நன்றாகப் படியாது ; அப்பொழுதைக்கு நன்றாகப் படியுமாறு தோன்றினாலும், நெடுநாளைக்கு அது நினைவில் நிற்காது; நெடுநாளைக்கு

அது நினைவில் நின்றாலும், அவ்வப்பொழுது, தேவையான இடத்து நினைவுக்கு வராது. எனவே உடலுக்கும், உள்ளத்திற்கும், அறிவுக்கும் தேவையானவற்றை அழுந்திப் பயிலவும் ஆழ்ந்து உணரவும் வேண்டும்.

பெரும்பாலும் இக்காலத்தில் எந்தத் துறையினரும் எதையும் அழுத்திப் பயில்வதும் இல்லை; ஆழ்ந்து உணர்வதும் இல்லை. அவ்வாறு ஈடுபடுவது தேவையில்லை என்றும் பலர் கருதுகின்றனர். இது புல்லறிவாண்மை.

கல்வி மட்டும் அன்று, சாப்பிடுகிற நிலையாயினும் ஒன்றை நன்றாகச் சுவைத்துச் சாப்பிட நாம் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். பயிலுதல் என்பது கற்பதுமட்டும் என்றிராமல், ஒன்றில் ஈடுபடுதல், தொடர்பு கொள்ளுதல், பழகுதல், அறிதல், கற்றுக் கொள்ளுதல் — முதலிய நுகர்ச்சிப் பொருள் அத்தனையும் குறிக்கும்.

எதிலுமே நாம் அழுந்தி ஈடுபடுவதில்லை. ஓர் ஓவியக் காட்சி சாலைக்குப் போகிறவர்கள், எல்லா ஓவியங்களையும் நடந்து போய்க் கொண்டே பார்ப்பதைப் பல சமையங்களில் நாம் காணலாம். அப்படிப் பார்ப்பதை விடப் பார்க்காமலிருப்பதே பயனுடையதாகும். நேரமாவது மிஞ்சும். ஓவியம் என்றால் பல நுட்பங்கள் உண்டு. வடிவம், வண்ணம், எண்ணம் என எத்தனையோ கூறுகளை நாம் ஓவியங்களில் சுவைக்கலாம். அவ்வாறில்லாமல் வெறும் காட்சிப் பொருளாக மட்டும் அதைக் கருதுவது நம் உணர்வுக் குறைவையும் அறிவுக் குறைவையுமே காட்டும்.

காலைக் கதிரவனின் மாட்சியை நாம் கண்டு சுவைத்திருக்கிறோமா? கடலின், மலையின், முகிலின், வான நிலத்தின், பால் நிலவின் குளிர் கதிர்களின், மரங்களின் இலைகளின், தளிர்களின், பறவைகளின், விலங்குகளின் அமைப்புகளில், அசைவுகளில், வண்ணங்களில், அழகுச் சுடர்களில் மனத்தை அழுந்த ஈடுபடுத்தி, உயிர் வேட்கையைத் தீர நிறைவு செய்பவர்கள் நம்மில் எத்தனைப் பேர் இருப்பர்? ஒரு குழந்தை அயர்ந்து தூங்கும் போது, அதன் கனவுகளில் மொய்க்கும் கற்பனைகளைச் சிறிது நேரம் உற்று நோக்கி உள்ளத்தின் உணர்வுகளைச் சுவைத்திருப்பவர்கள் எத்தனைப் பேர்?

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்;
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்; அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்
தொட்ட இடம் எலாம் கண்ணில் தட்டுப் பட்டாள்!

மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்! ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில் அந்த 'அழகெ'ன்பாள் கவிதை தந்தாள்!

திசை கண்டேன், வான் கண்டேன், உட்புறத்துச்
செறிந்தனவாம் பலப்பலவும் கண்டேன், யாண்டும்
அசைவனவும் நின்றனவும் கண்டேன். மற்றும்
அழகுதனைக் கண்டேன் ; நல் லின்பங் கண்டேன்.

என்று பாவேந்தர் பாரதிதாசன், பார்க்கின்ற இயற்கைப் பொருள்களையெல்லாம் நுட்பமாக அழுந்தி நோக்கி அவற்றிலுள்ள அழகைக் கண்டு, இன்பம் அடைந்ததாகக் கூறுகின்ற பாடலை இன்னொரு முறை திருப்பிப் படித்துச் சுவையுங்கள்.

இயற்கைப் பொருள்களை நாம் கண்டு சுவைக்கின்ற நல் உணர்வு குறைந்து வருகிறது. பொருள்களிலும், அறிவு நிலைகளிலும் நாம் ஆழ்ந்து, அழுந்தி ஈடுபாடு காட்டும் பொழுது நமக்கு உள்ளத்தின்பமும், அறிவின்பமும் ஏற்படுவதை நாம் உணர வேண்டும். அவ்வாறு ஈடுபட ஈடுபட நாம் அறிவிலும் உள்ள உணர்விலும் வளர்ச்சி அடைகிறோம். அவ்வாறு வளர்ச்சியடைவதுதான் மாந்த வாழ்க்கையின் பயன். உடலால் நாம் வளர்ச்சி அடையும் பொழுதே உள்ளத்தாலும் அறிவாலும் நாம் வளர்ச்சியும் மேம்பாடும் அடைதல் வேண்டும். உடல் மட்டும் வளர்ந்து, அறிவும் உள்ளமும் வளராமல் போனால், நாம் விலங்குகள், பறவைகள் போல்தான் இருக்கிறோம் என்பது பொருள். அதற்கு நாம் மாந்தர்களாகப் பிறந்திருக்க வேண்டுவதில்லை.

எனவே, நாம் காணுகின்ற பொருள்களையெல்லாம் அழுந்தியும் ஆழமாகவும் காணுதல் வேண்டும். கேட்கின்ற ஒலிகளையெல்லாம் அழுந்தியும் கூர்மையாகவும் கேட்க வேண்டும். சுவைக்கின்ற பொருள்களையெல்லாம் நன்கு சுவைக்க வேண்டும். இவ்வாறு பொருள் நுகர்ச்சி, அறிவு நுகர்ச்சி, உள்ள நுகர்ச்சி முதலியவற்றை நாம் எப்பொழுதுமே மேலோட்டமாக அஃதாவது 'Take it easy' என்பது போல் எடுத்துக் கொள்ளாமல், ஆழமாகவும் அழுந்தியும் ஈடுபாடு கொள்ளுதல் வேண்டும்.

இயற்கையைப் பார்த்துப் பார்த்து அறிவு பெறப் பெற, மக்களின் இயல்பு நிலைகளையும், குண நிலைகளையும், அறிவு நிலைகளையும் நாம் நன்கு அறிந்து கொள்ளுகிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே எப்பொழுதும் ஒன்றை நினைவிலேயே வைத்திருக்க வேண்டும்; அஃது, 'அழுந்திப் பயிலுக; ஆழ்ந்து உணர்க' என்பது. ○

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்

(நல்ல அறிவு முதிர்ச்சியுடைய குழந்தைகளின் பேச்சு, செயல் முதலியவை மிகவும் வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். பெரியவர்களால் பண்ண இயலாத கற்பனைத் திறன்களும், செயல் திறன்களும் சில நேரங்களில் அவர்கள் செய்வது, மிகவும் கவனித்து ஊக்கப்படுத்தத் தக்கன.

அத்தகைய குழந்தைகளின் பேச்சுகள், செயல்கள், நடவடிக்கைகள் முதலியவற்றைக் கவனித்து இந்தப் பகுதிக்கு எழுதியனுப்புங்கள், குழந்தைகளின் படங்களையும் அவர்களின் முழுப் பெயர், அகவை, கல்வி வகுப்பு முதலியவற்றையும் அனுப்புவது நல்லது.)

ஆசிரியர் முன்னுரை :

என் மூன்றும் மகள் திருவாட்டி. சித்திரச் செந்தாழை ஆறிறைவன் அறி.மு. இப்பொழுது குடும்பத்துடன் அமெரிக்காவில், அரிசோனு மாநிலத்தில் உள்ளாள். அவள் கணவர் திருவாளர் முனைவர். ஆறிறைவன். ஓர் அறிவியல் அறிஞர்.

இவர்களின் மகன் ஆறு அகவைப் பையன் செந்தணல்! இவன் மிகவும் சிறந்த அறிவுணர்வும், துடிதுடிப்பும், செயல் திறனும் உள்ளவன். அவன் பேச்சும் செயலும் எல்லாருக்கும் வியப்பு அளிப்பனவாகும். அவன் குழந்தைப் பருவத்திலிருந்தே சுவிட்சர்லாந்து, சப்பான், அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிலேயே இருந்து படித்தும் பழகியும் விட்டதால் இங்கு வந்தாலும், எல்லாரிடமும் பெரும்பாலும் ஆங்கிலத்திலும், சிறுபான்மை தமிழிலும் பேசுவான். அவன் பேசும் ஆங்கிலத்தைக் கேட்டு அவனுடன் பேசுவதற்கு வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் திணறுவார்கள். குறிப்பாக என் துணைவியார் மிக மிகத் திக்கித் திணறி அவர் பேசும் பேச்சிற்கும், கேட்கும் கேள்விகளுக்கும் 'ஊம்', 'ஊம்' என்று விடை கூறி நிலையைச் சரிகட்டி விடுவாள்.

சென்ற ஆண்டு தொடக்கத்தில் என் மகளும் செந்தணலும் மட்டும் தமிழகம் வந்தனர். அவர்களை வரவேற்று அழைத்து வர தென்மொழிக் குடும்பமே சென்னை வானூர்தி நிலையம் சென்றிருந்தது.

அவர்களும் வானூர்தி நிலையத்தை விட்டு, பற்பல ஆய்வு-களுக்குப் பின் இரவு 12 மணியளவில் வெளியே வந்தனர். முன்பு ஒரு முறை சுவிட்சர்லாந்தினின்று வந்து போன பின் இம்முறை செந்தணல் நன்கு வளர்ந்திருந்தான், நன்றாகப் பேசவும் கற்றிருந்-தான். அவனுக்கு 5 அகவைதான் முடிந்திருந்தது.

பையனை அவன் தாயார் வானூர்தி நிலையத்திற்கு வெளியே கொண்டு வந்தவுடன், அனைவரும் நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு அவனை வாங்கி வாங்கிக் கொஞ்சினர். எல்லா-ரும் அவனிடம் பேச விரும்பினரேனும், அவன் மட்டும் யாரிடமும் சரளமாகப் பேசாமல் ஓரிரண்டு ஆங்கிலச் சொற்களிலேயே விடை கொடுத்து வந்தான்.

இறுதியாக அவனை நான் தூக்கி வைத்துக் கொண்டு, அவனிடம் பேச்சுக் கொடுத்தேன். அவன் என்னை நன்றாக அடையாளம் கண்டு கொண்டு,

"அம்முப்பா, I dislike this country ! I hate it" (நான் இந்த நாட்டை விரும்பவில்லை ; இதை நான் வெறுக்கிறேன்) என்று ஒரு போடு போட்டான்.

நான் 'Why' (ஏன்) என்றேன்.

"See அம்முப்பா, everywhere their are dirties, mosquitoes and Flies. (பாருங்கள் அம்முப்பா, எங்கு பார்த்தாலும் அழுக்கு-களும், கொசுக்களும், ஈக்களும்)" என்று கூறிவிட்டு,

"I don't like this Thamizh Nadu. (அதனால் நான் தமிழ் நாட்டை விரும்பவில்லை.) And I also do not want to be a Tamilian, I want to be an American. (அத்துடன் நான் ஒரு தமிழனாகவும் இருக்க விரும்பவில்லை. நான் ஒரு அமெரிக்கனாக இருக்கவே விரும்புகிறேன்)" என்றான்.

'ஐந்து அகவையில் இப்படி ஒரு பார்வையா அவனுக்கு !' என்று வியந்தபடி அவன் அறிவாற்றலையும் விருப்பு வெறுப்புகளை-யும் எண்ணி மகிழ்ந்து அனைவரிடம் கூறினேன்.

"இப்படிப் பட்ட செந்தணல் வெளிநாட்டில் உள்ள பொழுது எப்படி இருக்கிறான் ; இயங்குகிறான் ; பேசுகிறான் ; குறும்பு செய்கிறான் ?— அவைபற்றி நீ விடுக்கின்ற மடல்களில் எழுது அம்மா, நாங்கள் பார்க்க வாய்ப்பில்லாவிடினும் ; கேட்டாவது மகிழ்ச்சியடைகிறோம்" என்று செந்தாமரையிடம் ஒரு முறை தொலைபேசியில் பேசும் பொழுது கூறினேன்.

என் மகள் அவன் பேசிய, செய்த குறும்பு உரைகளையும், செயல்களையும் இப்பொழுது தொடர்ந்து எழுதி வர இசைந்துள்-ளாள். அவள் எழுதும் செய்திகள் தொடராக வெளியிடப் பெறும். இடையிடைப் பிறர் எழுதும் கட்டுரைகளும் வெளியிடப் பெறும்.

1. அப்படியானல் அம்மும்மா வயிறு இவ்வளவு பெரியதாக இருந்ததா?

(முன் குறிப்பு : ஆங்கிலத்தில் உள்ளவற்றைச் செந்தணல் ஆங்கிலத்திலேயே பேசினுன்; தமிழில் உள்ளவற்றைத் தமிழிலேயே பேசினுன்.)

"அம்மா! நான் உன் வயிற்றில் இருந்தேன் என்று நீ சொல்லியிருந்தாய், நீ யார் வயிற்றில் இருந்தாய்?

"நான் என் அம்மா வயிற்றில், அதாவது அம்மும்மா வயிற்றில் இருந்தேன்."

"அப்படியானல், பொற்கொடியம்மா (பெரிய அக்காள்) யார் வயிற்றில் இருந்தார்கள்?"

"பொற்கொடியம்மாவும் அம்மும்மா வயிற்றில் தான் இருந்தார்கள்!"

"அப்படியானல், பூங்குன்று மாமா, தேன் பெரியம்மா இவர்களும் கூடவா அம்மும்மா வயிற்றிலிருந்து வந்தார்கள்?"

"ஆமாம்"

"சித்தியும் கூடவா?; பொழில் மாமாவும் கூடவா? எல்லோருமா?"

"ஆமாம்"

"அப்படியானல், அம்மும்மா வயிறு இவ்வளவு பெரியதாக இருந்ததா?" என்று கைகள் இரண்டையும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரித்து ஒரு சுற்று சுற்றிக் காட்டினுன்.

2. நிறைய மதிப்பெண்கள் வாங்கி என்ன பயன்?

முதல் நாள் தேர்வில் அவன் சரியாகவே மதிப்பெண்கள் வாங்கவில்லை.

அதனல் அவன் அப்பாவிற்கு, சற்றே சினம் அவன் மீதும், என்மீதும்.

எனவே, மறுதேர்விற்கு நான் அவனுக்கு நிறைய பயிற்சி கொடுத்தேன். அவனும் நன்ருகவே படித்தான். ஆனல் நாங்கள் எடுக்கும் முயற்சி அவருக்குத் தெரியாது.

ஒரு நாள் அவர் அவனைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தார். எப்பொழுதும் குளிக்கும் போது அவன் ஆடிக்கொண்டே இருப்பான். 'கராத்தே' செய்வது போலவும், வேறு பலர் செய்வது பேசுவது போலவும் செய்து செய்து காட்டுவது அவன் வழக்கம். நான் குளித்து விடும் போது அவற்றையெல்லாம் பார்த்து மகிழ்ந்து கொண்டே மெது மெதுவாய்க் குளித்து விடுவேன்.

சோம்பலிலிருந்து எழுந்து வா !

என் தோழனே...!
சோம்பல் கண்ணுக்குத் தெரியாத நெருப்பு...!
கொள்கைக் கோட்டை சாம்பலான பிறகுதான்,
அதன் உருவமே தெரியும்...!
அருள் செய்து சோம்பலிலிருந்து
தப்பி வா... இல்லையேல்,
நீ சிறகுகள் இருந்தாலும், கரப்பான் பூச்சிதான்...!
குரல் கொடுத்தாலும், நீ கிணற்றுத் தவளைதான்...!
பார்வை இருந்தாலும், நீ கரையேறாத மீன்...!
கைகள் இருந்தாலும், நீ தடுக்க இயலாத மரம்...!
கால்கள் இருந்தாலும், நீ பயணமில்லாத சிலந்தி...!
காதுகள் இருந்தாலும், நீ இசை விளங்காத எலிக்குஞ்சு...!
நீ வாசல் திறக்காமல்,
பலகணிகளைத் திறந்து வைத்து,
வாசலில் கோலமிடப் போகிறாய்...!
நீ, நான்கு சுவர்களுக்குள் இருந்து கொண்டு,
ஆட்சி நடத்தும் கரையான்...!
அன்பு கூர்ந்து,
சோம்பலிலிருந்து தப்பி வா...!
நமக்காகத்தான் கதிரவன், நிலவு...!
எழுந்து வா...!
உலகம் நம் உரிமை...!
முயன்று பார்ப்போம்...!
விண்மீன்களைக் கூட எண்ணிவிடலாம்...!

எசு. எம். சுந்தர் (நன்றி ! —சூலை 91. 'சர்வோதயம்')

(முன் பக்கத் தொடர்ச்சி)

அவன், அவருக்கு ஈடு கொடுத்து, உடம்பை வளைக்காமல் விளையாடிக் கொண்டே குளிப்பது பிடிக்காது. எனவே அவர் அவனிடம் சற்றுக் கடுமையாகப் பேசிக் கொண்டே குளித்து விடுவார்.

அப்படிக் குளித்து விடுவது அவனுக்குத் துளியும் பிடிக்காது. வேண்டுமென்றே 'கராத்தே'வை வேகமாகச் செய்து காட்டுவான்.

அப்போது அவர் 'நீ நன்றாகத் தேர்வில் மதிப்பெண் வாங்கவில்லை. நான் சிறியவனாக இருந்தபோது பத்துக்குப் பத்து என்றெல்லாம் மதிப்பெண் வாங்குவேன்'' என்று சொன்னார்.

அதற்கு அவன், "Eventhough you got a good mark, What is use ? you are not acting nicely with me. So even I got a bad marke it's O.K. because I am not like you." (''நீங்கள் அப்படியே நல்ல மதிப்பெண் வாங்கியிருந்தாலும் என்ன பயன் ? —நீங்கள் இப்போது என்னிடம் சரியான முறையில் இயங்குவதில்லையே ! எனவே, நான் சரியான மதிப்பெண் வாங்காமல் இருந்தாலும் கூட அது தாழ்வில்லை ; நான் உங்களைப் போல் சரியாக இயங்காதவன் இல்லையே ! '' என்றான் ! (தொடரும்)

காவிரி ஆற்று நீர்ச் சிக்கல்!

காவிரியாறு கருநாடகத்திலுள்ள குடகு மலையில் (குடகு மாவட்டம்) தோன்றிக் கருநாடகம் வழியாகத் தமிழ்நாட்டில் பாய்கிறது. அதன் நீளம் ஏறத்தாழ 800 அ. மா. (கி. மீ.) அஃதாவது தோராயமாக 500 கற்கள் (மைல்கள்). அது 320 அ.மா. (அஃதாவது 200 கற்கள்) கருநாடகத்திலும், 418 அ. மா. (அஃதாவது 261½ கற்கள்) தமிழ்நாட்டிலும், 84 அ. மா. (அஃதாவது 52½ கற்கள் இரண்டு மாநிலங்களுக்கும் இடையில் எல்லையாகவும் ஓடுகிறது.

அதனுடன் எட்டு கிளையாறுகளும் வந்து இணைகின்றன. அவற்றுள் ஏமவதி, ஆரங்கி, இலட்சுமண தீர்த்தா, கபினி, சுவர்ணவதி ஆகிய ஐந்தும் கருநாடகத்திலும், பவானி, நொய்யல், அமராவதி தமிழ்நாட்டிலும் பாய்கின்றன.

இவற்றுள் கபினி, அமராவதி, பவானி ஆகிய மூன்றும் கேரளத்தில் தோன்றி, கருநாடகம் வழியாகக் கபினியும், தமிழ்நாடு வழியாக பவானியும், அமராவதியும் காவிரியுடன் கலக்கின்றன. காவிரி கருநாடகத்தில் தோன்றினாலும், தமிழ் நாட்டின் வழியாக ஓடித் தஞ்சை மாவட்டத்தைத் தாண்டி வங்காளக் கடலில் சேர்கிறது.

காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பரப்பு ஏறத்தாழ 81, 155 ச. அ. மா (41, 155 ச. க.) ஆகும். இதில் 34, 273 ச. அ. மா. கருநாடத்திலும், 44, 016 ச. அ. மா. தமிழ்நாட்டிலும், 2866 ச. அ. மா. கேரளத்திலும் உள்ளது.

காவிரி ஆற்றில் மொத்தம் 79, 200 கோடி கன அடி தண்ணீர் பாய்வதாக ஒரு கணக்கும், 74, 000 கோடி க. அ. தண்ணீர் பாய்வதாகவும் மற்றொரு கணக்கும் கூறுகின்றன. இவை இரண்டு கணக்குகளிலும், முதலாவது கணக்கே ஓரளவு சரியாக இருக்கலாம் என்று மதிப்பிடுகின்றனர்.

இம் மொத்த தண்ணீரில் கருநாடக மாநிலம் 38, 800 கோடி கன அடி நீரும், தமிழ்நாடு 21, 700 கோடி கன அடி நீரும், கேரளா 12, 500 கோடி க.அ. நீரும் அளிக்கிறது என்று மதிப்பிடுகிறார்கள். இதை விழுக்காட்டு அளவில் கூறினால், கருநாடகம் 53% -உம், தமிழ்நாடு 30% -உம், கேரளம் 17% -உம் காவிரி ஆற்றுக்குத் தண்ணீர் தருகிறது. இந்தத் தண்ணீரை, கருநாடகமும் கேரளமும் தென்மேற்குப் பருவ மழையாலும், தமிழ்நாடு வடகிழக்குப் பருவ மழையாலும் தருகின்றனவாகக் கணக்கிடப் பெறுகிறது.

காவிரி நீர்ப் பகிர்வு ஒப்பந்தம் 1892-ஆம் ஆண்டில், மைசூர் அரசும், சென்னை மாகாண அரசும் பேச்சுரை நடத்தி செய்து கொண்டன. இவ்வொப்பந்தம் மீண்டும் மறு ஆய்வு செய்யப் பெற்று, 1924-ஆம் ஆண்டில் மைசூர் அரசராலும், சென்னை மாகாண ஆளுநராலும் மற்றும் ஒரு முடிவை ஏற்படுத்திக்கொண்டு செய்து கொள்ளப் பெற்றது.

அந்த முடிவுப்படி, மைசூரில் 44,827 நூறு கோடி கன அடி கொள்ளளவுள்ள கிருட்டிணராசசாகர் அணையும் (1924), சென்னை (அப்பொழுது மதராசு) மாகாணத்தில் 93,500 நூறு கோடி க.அ. கொள்ளளவு கொண்ட மேட்டூர் அணையும் (1934) கட்டிக் கொள்ள இந்த ஒப்பந்தம் வகை செய்தது. ஐம்பது ஆண்டுகள் பட்டறிவைக் கொண்டு, ஐம்பதாவது ஆண்டிற்குப் பின் ஒப்பந்தத்தை மீண்டும் ஒரு முறை ஆய்வு செய்ய அந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப் பெற்றிருந்தது. அப்பொழுதைய நிலவரப்படி மிகுதி நீரைப் பங்கிட்டுக் கொள்வது பற்றிப் பேசி முடிவு செய்து கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப் பெற்றது.

இந்த இரண்டு அணைகளுக்கும் உரிய வரை படங்களையும், திட்டங்களையும், அப்பொழுது மைசூர் அரசவையில் புகழ் பெற்றிருந்த வயவர் (சர்) எம். விசுவேசுவரய்யா தாம் அணியப்படுத்திக் கொடுத்தார்.

இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது (1924-இல்) வடகேரளமும், மைசூர் அரசுக்கு ஒட்டிய பகுதியும் அப்பொழுதைய சென்னை (மதராசு) மாகாணத்தின் ஒரு மாவட்டமாக இருந்தது. வடகன்னடம் பம்பாய் (இப்பொழுது மராட்டிய) மாகாணத்தின் ஒரு மாவட்டமாக இருந்தது.

1956-ஆம் ஆண்டு மொழி வழி மாநிலங்கள் அமைக்கப்பட்ட பொழுது, திருவாங்கூர், கொச்சி கேரளத்திலும், வடகன்னடம், குடகு கருநாடகத்திலும் இணைக்கப்பெற்றன. இந்த அரசியல் எல்லை மாற்றங்கள் தாம் காவிரி ஆற்று நீர்ச்சிக்கலை உண்டாக்கி விட்டது. தண்ணீர்த் தட்டுப்பாட்டு நிலை கருநாடகத்துக்கும், தமிழ்நாட்டுக்கும் மேலும் சிக்கலாகிவிட்டது.

அதன் பின்னர் தமிழ்நாடு பவானி ஆற்றுக்குக் குறுக்கே ஓர் அணை கட்டியது. கருநாடகம் கபினி ஆற்றுக்குக் குறுக்கே ஓர் அணை கட்டியது. மீண்டும் ஏமாவதி ஆற்றுக்குக் குறுக்கேயும், ஆரங்கி ஆற்றுக்குக் குறுக்கேயும் மீண்டும் இரண்டாவது, மூன்றாவது அணைகளையும் கருநாடகம் கட்டிக்கொண்டது.

தமிழ்நாடு இவ்வணைகளைக் கட்டக்கூடாது என்று மறுப்புக் கூறியது. ஆனால், கருநாடகம் திட்டகுழுவின் இசைவு இன்றியே அந்த அணைகளைக் கட்டி நீரைத் தேக்கிக்கொண்டது.

இது தொடர்பாக ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்க்க 1968 முதல் தமிழ்நாடும், கருநாடகமும் பேச்சுரை தொடங்கி இன்னும் தீர்ந்தபாடில்லை. நடுவண் அரசு இந்தச் சிக்கலைக் கண்டும் காணாததுமாகவே ஒதுங்கியிருந்து விட்டது. சிக்கல் நீண்டு கொண்டே வந்தது.

இந்தச் சிக்கலை மேலும் மேலும் சிக்கலுக்குள்ளாக்கின அடுத்தடுத்து 1970 முதல் 26 முறை நடந்த பேச்சுரைகள். அவற்றின் இறுதி முயற்சியாகத்தான் 1990 சூன் 2-இல் பம்பாய் உயர்நெறி மன்ற நடுவர் சித்ததோசு முகர்சி தலைமையில் ஒரு நடுவர்

ஆவலும் அவாவும்.

—அதியமான்

முதலில் ஆவல் என்பதற்கும், அவா என்பதற்கும் என்ன வேறுபாடு என்பதை அறிந்து கொள்ளல் வேண்டும். ஆவல் என்பது மாந்த இனத்திற்கு மட்டுமன்று உயிரினங்கள் அனைத்துக்கும் வேண்டும் ஓர் உணர்வு. இவ்வுணர்வால்தான் உலகத்திலுள்ள அத்தனை ஆக்கங்களும் தோன்றின. ஆவல் என்ற உணர்வு மட்டும் இல்லாதிருந்தால் உலகில் மாடமாளிகை, கூடகோபுரங்கள் தோன்றி இருக்கா. அழகான வளமனைகள் உருவாயிருக்கா. வானூர்தி வந்திருக்காது. தொலைபேசி கண்டுபிடித்திருக்க மாட்டார்கள். அவ்வளவு ஏன்? வாழ்க்கையே இருக்காது. எதையும் தேடாமல், போட்ட இடத்திலேயே கிடக்கும் மண்ணாங் கட்டியாய், கல்லாய் மாந்தன் இருந்திருப்பான். இயக்கம் கூட இருந்திருக்காது. உணர்ச்சியற்ற செத்த பிணமாகத்தான் இருந்திருப்பான்.

அவா என்பது ஆவல் என்பதான உணர்வைக் காட்டிலும் மிகுதியான உணர்ச்சியை உடையது. அவா என்பதற்கு மிக்க ஆசை என்பதாக அகரமுதலி குறிக்கிறது. இந்த அவா உணர்ச்சி கூடுதலான பொருள்களைச் சேர்க்கத்தூண்டும். தன்நிலைக்குக் கூடுதலாகவே செலவு செய்யவும் செய்யும். ஆடம்பரத்தை விரும்பும். தன் ஆற்றலுக்கு மிகுதியான செயல்களையும் செய்யத் தூண்டி, பின் அதனால் பெரும் இழப்பையும் உண்டாக்கும். அதனாலேயே அவா கூடாது என்பர் நம் சான்றோர். வள்ளுவப் பேராசானும் அறம்பற்றிக்கூறும் போது,

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தை நடுவணரசு ஏற்படுத்தியது. அந்த நடுவர் மன்றம் கருநாடக மாநிலத்திலும் தமிழ்நாட்டிலும் பரவலாகச் சுற்றுச் செலவு செய்து பலவகையிலும் ஆராய்ந்து இறுதியாக, கருநாடகம் தமிழ்நாட்டிற்கு ஆண்டுதோறும் 205 நூறு கோடி கன அடி தண்ணீர் விடுமாறு இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

இந்த உத்தரவைத்தான் கருநாடக அரசு ஏற்க மறுத்து விட்டது. இதன் பின்னர்தான் இச்சிக்கல் மேலும் தீவிர மடைந்து உச்ச நெறிமன்றத் தீர்ப்பு வரை போயிருக்கிறது. இன்னும் இது தீர்ந்த பாடில்லை. இச்சிக்கல் என்று தீருமோ என்றும் தெரிய வில்லை. மொத்தத்தில் இந்தச் சிக்கலால் கடந்த 13 ஆண்டுகளாகக் காவிரி நீர் வரத்துச் சரிவர இல்லாததால் தமிழ்நாட்டின் தஞ்சை மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும் குறுவை நெல் விளைச்சல் முற்றிலும் நிறுத்தப்பட்டுவிட்டது. தஞ்சை மாவட்ட நெல் விளைச்சல் ஒரு போகத்திற்குத்தான் மிகுந்த இடர்ப்பாடு களுடனும் அச்சத்துடனும் செய்ய முடிகிறது. இவற்றால் தமிழ் நாட்டில் கணிசமான நெல் விளைச்சல் தடைப்பட்டுவிட்டது.

நன்றி! — அடிப்படை சர்வோதயம், ஆக. '91

"அழுக்காறு அவாவெகுளி இன்னுச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்" என்பார்;

இக்குறளில் அவர் அவா என்ற சொல்லை மிகு ஆவலைக் குறிக்கவே எடுத்தாண்டுள்ளார். மேலும் அவா என்ற உணர்ச்சியே பொறுமைக்கும், சினத்துக்கும், கடுஞ்சொல் கூறுவதற்கும் அடிப்படையாக இருக்கிறது. அவாவின் காரணியமாக ஒருவன் அலையோ அலையென்றலைந்து இறுதியில் கெட்டும் போவான். இந்த அவா உணர்ச்சி உள்ளவனிடம் மாந்தக் குணம் என்ற பண்பும் இருக்காது. எவ்வகையாலும் சரி பொருளைக் குவித்து வைக்கவே விரும்புவான். பிறர் துன்பங்கண்டு இரங்கவும் மாட்டான். அறம் என்ற சொல்லுக்கு பொருள் தெரியாதவனுகவே இயங்குவான், இரண்டுக்கும் உள்ள வேற்றுமை ஆவல் கட்டுப் பாட்டுக்குள் இருக்கும் உணர்வு; அவா கட்டுப்பாட்டை மீறிச் செயல்படும் உணர்ச்சி; துன்பத்தை தரும். அதனுல் அவாகூடாதே தவிர ஆவல் உணர்வு இருத்தல் கூடா தென்பதாகாது.

ஆவல் இருந்தால்தான் முன்னேறும் எண்ணம் வளரும்; வாழ்க்கைக்கு, தேவைகளை உருவாக்குவதற்குக் கட்டாயம் ஆவல் வேண்டும். எனவே ஆவல் குணத்தை சிறு அகவை முதல் வளர்க்கப் பயிற்சி அளிப்பது நற்பயனைத்தரும். ஆவல் என்பதின் உள்பொருளை உணராமல் அவா என்ற உணர்ச்சியின் பொருளைக் கூறி ஆசையே துன்பத்துக்குக் காரணியம் எனக் கொண்டு, ஆவல் உணர்வுகளை அழித்தல் பெருங்கேடு தரும். 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற அறிவுரைக் கருத்தும் ஆவலின் அடிப்படையில் கூறியதாகும். பசி கடுமையாக இருக்கும், ஆனுல் உண்ண மனமின்றி இருப்பவனைக் கேட்டால் எனக்கு என்னவோ உண்ண வேண்டுமென்ற ஆவல் வரவில்லை எனக்கூறி உண்ணமறுத்திருப்பவனைக் காண்கிறோம். எனவே உயிர் வாழ்வதற்கே ஆவல் இன்றியமையாதது. இந்த உணர்வை எவ்வகைக் காரணியங்களையும் காட்டி, அ்து அறவுரை எனக்கூறி மூளைச் சலவைச்செய்வது, உலகம் முன்னேறுவதற்கு பெருந்தடையாக முடியும். ஆவல் என்பது பயிர்வளருவதற்குப் போதுமான மழைப்பொழிவு போன்றது; அவா என்பது மிகுதியாகப் பெய்யும் மழை அழிவைத் தருவது போன்றது.

அதனுல் ஆவலின் உருவாக்க உணர்வை மழுக்கிவிடலாகாது. அது பல ஆக்கப்பணிகளை முடக்கிவிடும். வாழ்க்கையில் ஆக்கத்தைத் தடுத்து முயற்சியைத் கெடுத்துவிடும்.

ஆவலை அடக்கு என்று சொன்னவர்கள் அல்லது சொல்லுகின்றவர்கள் அந்த உணர்விற்கு ஆட்படாமலில்லை; எதுவும் வேண்டாம் எனத் துறந்த முனிவர்களுக்கும் தங்களால் கண்டு பிடித்த அல்லது தங்களுடைய கருத்தைப் பிறருக்குச் சொல்ல ஆவல் இல்லாமல் போனுல் அவை யாவும் மக்களுக்கும் பயன்படாமல் இருந்து மட்கிப்போகும்; பல ஆண்டுகளாக முயன்று ஆய்ந்து கண்ட ஆக்கங்கள் ஆவல் உணர்வில்லாதிருந்தால் பயனற்று வீணுகிப் போகுமன்றோ? !

படுத்தவுடன் தூங்கப் பழகிக் கொள்ளுங்கள்!

நம்மில் சிலர் படுத்தவுடன் சிறிது நேரத்திற்குள், அஃதாவது பத்து, பதினொரு நொடிகளில் (Seconds) தூங்கி விடுவார்கள், பலர் அல்லது மிகுதிப்பேர் படுக்கையில் படுத்து நெடுநேரம் தூக்கம் வராமல், புரண்டு கொண்டே, அல்லது விழித்துக் கொண்டே கிடப்பார்கள். இத்தகையவர்கள் கீழே கூறப்பெறும் சில முயற்சிகளைச் செய்தால் விரைவில் மிக விரைவில் அஃதாவது பதினொரு நொடிகளில் தூங்கி விட முடியும்; இவ்வாறு எம். ஆர். ஹோப் மேயர் (M.R. HOPE MAYOR) என்னும் அறிஞர் தம்முடைய 'Heres Help' என்னும் நூலில் குறிப்பிடுகிறார்;

அவர் விரைவில் - பதினொரு நொடிக்குள் தூங்குவதற்குக் கூறும் வழிகள் இவை :

1. உங்கள் உடலைத் தளர்த்துதல் : (Relax your Body):

படுத்தவுடன் உடல் அன்றைய பலவகை உடல், மனம், அறிவு உழைப்புகளால் விறைப்பு (Tention) உடையனவாக இருக்கும். அவற்றைத் தளர்வு (Relaxation) நிலைக்குக் கொண்டு வருதல் வேண்டும்,

(தளர்வு நிலைக்குக் கொண்டு வருதல் என்றால், மனத்தில் உடலைத் தளர்ச்சியாக ஆகவேண்டும் என்று எண்ணி, உடலின் விறைப்பு தன்மையைத் தளர்ந்தது போல் நினைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது உடல் தளர்ந்துவிடும்;)

2. உங்களுடைய முகத்தைத் தளர்த்துதல் : (Relax your Face)

உடலுக்குச் சொன்னது போலவே முகத்தசைகளையும் விறைப்பில்லாமல் தளர்ச்சியாக இருக்கும்படி வைத்துக் கொள்ளுதல்.

3. முகாமையாக உங்கள் கண்களைத் தளர்த்துதல் : (More important relax your eyes)

மேலே கூறியது போலவே கண்களையும் இயல்பாக மூடிக் கொண்டு, வேறு எண்ணங்கள் இன்றி இருக்க வேண்டும்;

4. மிகவும் முகாமையாக இருப்பது, மனத்தில் அலைவான எண்ணங்களும் வேறு காட்சிகளும் இன்றி வெறுமனாக வைத்திருத்தல் : (Most important is blank out all mental pictures)

இந்த நான்கு முறைகளையும் தெளிவாகவும் சரியாகவும் கடைப்பிடித்தால், நீங்கள் பதினொரு விநாடிகளில் தூங்கலாம்; அவ்வாறு உடனடியாக நீங்கள் தூங்கவில்லையென்றால், நீங்கள் அந்த நான்கு முறைகளில் ஏதேனும் ஒன்றிரண்டைச் சரியாகக் கடைப்பிடிக்கவில்லை என்று பொருள்,

இம் முறைகளைக் கடைப்பிடிப்பது இரண்டு மூன்று இரவுகளுக்குச் சிறிது கடினமாக இருக்கலாம், ஆனால், பிறகு எளிதாகப் போய்விடும்.

இனி, மேலே கூறிய முறைகளுடன், மனத்தை ஒருமுகப் படுத்துவதற்கும் அவ்வறிஞர் ஒரு சில வழிமுறைகளையும் கூறுகிறார். அவை இவை :

நீங்கள் படுக்கையில் படுத்தவுடன், உங்களுடைய மனத்தில் முழுவதுமாகக் கருமை நிறம் நிரம்பியிருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளவேண்டும். மனத்தில் இருட்டு நிறைந்து, வேறு தோற்றம் இன்றி, இன்பமாக, மென்மையாக உள்ளது போல் கற்பனை செய்து கொள்ள வேண்டும். வேறு சிந்தனை இல்லாத காரணத்தால், உங்களுக்கு உறக்கம் உடனடியாக வந்துவிடும்.

உங்களில் சிலர் கருமை நிறத்தைக் கற்பனை செய்து கொள்ள முடியவில்லையானால், சாம்பல் நிறத்தைக் கற்பனை செய்து கொள்ளலாம். எப்படியும் நீங்கள் ஒளியில்லாத வண்ணங்களான கருமை, சாம்பல், கருநீலம், ஊதா இவை போன்ற வண்ணங்களைக் கற்பனை செய்து கொள்ளலாம். ஆனால், ஒளிவண்ணங்களான சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள் (ஆரஞ்சு) வண்ணங்களை கற்பனை செய்து கொள்ளக் கூடாது.

இவையன்றி, மனத்தில் வடிவமற்ற ஒரு பொருளை (கல், மரக்கட்டை, ஏதேனும் இரும்புத்துண்டு, குட்டிசுவர் போன்றவைகளை) நினைத்துக் கொள்ளலாம். அவற்றினின்று படிப்படியாக மனத்தை வெறுமையாக்கிக் கொள்ளலாம்.

இதன் மெய்ம்மம் (தத்துவம்) என்னவென்றால், உங்கள் மனம் எந்த முழுமையான பொருளின் படத்தையும் கற்பனை செய்து கொள்வதைத் தடுத்து, அதை வெறுமையாக (காலியாக) வைத்துக் கொள்ளச் செய்வதுதான். இவையெல்லாம் பயனளிக்க வில்லையானால், இக்கட்டுரையைத் திரும்பத் திரும்பப் படியுங்கள். தூக்கம் விரைவில் வரும்.

—நன்றி ! 'சர்வோதயம்' ஆக-91

ஃ இந்தியாவில் ஓடும் தொடர்வண்டிகள் அடிக்கடி நேர்ச்சிகளில் (விபத்துகளில்) சிக்குகின்றன. இவற்றுக்குக் காரணங்கள் பல இருந்தாலும் தலையாய காரணங்கள் சில உண்டு. அவை பழுதடைந்த பெட்டிகள், மாற்றப்படாத பழைய தண்டவாளங்கள் என்பனவும் ஆகும். இந்தியத் தொடர்வண்டிகளில் ஓடிக்கொண்டிருக்கும் பெட்டிகள் ஏறத்தாழ 28000 ஆகும். இவற்றுள் 5500 பெட்டிகள் இன்னும் பழுத்டைந்த நிலையிலேயே ஓடிக்கொண்டுள்ளன. அதே போல் மாற்றப்பட வேண்டிய தண்டவாளங்களில் 12 ஆயிரம் அ. மா. (கி. மீ.) நீளமுள்ள தண்டவாளங்கள் இன்னும் மாற்றப்படவே இல்லையாம்.

உங்களுக்கு தெரியுமா?

- மாந்தன் நாள் ஒன்றுக்கு 22,000 முறை காற்றை உயிர்த்து வாழ்கிறான்.
- உலகம் முழுவதும், 3,50,000 க்கும் மேற்பட்ட நிலைத்திணை (தாவர) இனங்கள் உள்ளன.
- இந்தியா முழுவதும் 2.75 இலக்கம் மருந்துக் கடைகளும், 9000 ஆயிரம் மருந்து உருவாக்கும் நிறுவனங்களும் உள்ளன.
- கடலில் கல் (Mile) அளவு வேறு. அவ்வளவின் படி 1 கடல் கல் தொலைவு என்பது 1.8546 அ: மா. (கி. மீ.) ஆகும்.
- இன்று உலகம் முழுவதிலும் மாந்த இனம் உள்பட 10,75,480 விலங்கு இனங்கள் உள்ளன என்று உயிரியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.
- மாந்தன் ஒருவனுக்கு ஒருநாளைக்கு ஏறத்தாழ 16 அயிர எடை (கிலோ கிராம்) காற்றும், 2.5 பதினை (லிட்டர்) நீரும், 1.5 அயிர எடை உணவும் தேவைப்படுகின்றன.
- மாந்தன் ஒருவனால் உணவின்றி 5 கிழமை(வாரங்)களும் நீரின்றி 5 நாள்களும், காற்று இன்றி 5 நிமையமுமே உயிர் வாழ முடியும்.
- தொலைக்காட்சியில் ஏறத்தாழ 90 அலை வரிசைகளில் ஒளி பரப்புச் செய்யலாம்.
- உலகிலேயே அரசியல் கட்சிகள், செய்தித்தாள்கள், அறமன்றம், உருபா தாள், வருமான வரி, கொலைகள், கொள்ளைகள் அறவே இல்லாத நாடு, பிரான்சுக்கும் இசுப்பெயினுக்கும் இடையில் உள்ள ஒரு சின்னஞ் சிறு நாடாகிய அன்டோரா என்பதுதான்.
- வட துருவத்தில் நிலம் என்பது பெயருக்கும் இல்லை; முழுவதும் பனிக்கட்டிகள் நிரம்பிய கடல் பகுதிதான்.
- இந்தியாவில் உள்ள ஆறுகளில் எல்லாமே மலைகளில் தோன்றி நிலப்பரப்பில் ஓடிக் கடலிலேயே கலக்கின்றன; ஆனால் யமுனை ஆறு மட்டும் கடலிலேயே கலப்பதில்லை. போகப் போகச் சிறுத்து நிலத்திலேயே தேங்கி விடுகிறது.
- ஆப்பிரிக்காவில் யானைகள், அரிமாக்கள் (சிங்கங்கள்), காட்டெருமைகள் முதலிய அனைத்துக் காட்டு விலங்குகளும் வாழ்கின்றன; ஆனால் அங்குள்ள காடுகளில் புலிகள் மட்டும் இல்லை.
- கழகக் காலத்தில் தமிழர்கள் ஆடைகளைத் தைத்து உடுத்தனர் என்பதும், அவ்வாடைகளைத் தைப்பவர்கள் துன்னற்காரர் என்று அழைக்கப் பெற்றதும் பதிற்றுப்பத்து (42), புறநானூறு (69) பொருநர் ஆற்றுப்படை (79-81, 153-154) ஆகிய பாடல்களால் தெரியவருகின்றன.

❖ சிங்கப்பூரில் மெல்லுபசை (Chewing gum) என்னும் ஒருவகை சுவையத்திற்குத் தடையிடப்பெற்றுள்ளது.

❖ இந்தியாவில் ஒரு நாடாளுமன்றத் தேர்தலை நடத்த பத்தாயிரம் கோடி உருபா அனைத்து வகையிலும் செலவாகிறது.

❖ இந்தியாவில் உள்ள கறுப்புப் பணம் கீழ்வருமாறு மதிப்பிடப் பட்டிருக்கிறது:

1950-இல் 600 கோடி
1960-இல் 1,150 கோடி
1970-இல் 9,958 கோடி
1980-இல் 37,000 கோடி
1990-இல் 80,000 கோடி
1991-இறுதியில் 1,00,000 கோடி (தோரா)

மொத்தத்தில் கூறுவதானால், நாட்டின் வருமானத்தில் ஏறத்தாழ 20 விழுக்காடு அளவில் கறுப்புப் பணம் தாண்டவம் ஆடுகிறது.

❖ இந்தியாவிலிருந்து ஆண்டுக்கு ஆறாயிரம் கோடி வைரம் ஏற்றுமதியாகிறது. இது உலக வைர உருவாகத்தில் 60 விழுக்காடு ஆகும்.

❖ தமிழகத்தில் கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்கள் தர்மபுரி, வடஆர்க்காடு—அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர், தென்னார்க்காடு, சேலம், பெரியார், திண்டுக்கல், அண்ணா, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களாகும்.

❖ இன்றுள்ள நிலையில் இந்தியா உருபாவின் உண்மையான மதிப்பு 6.57 காசுகள் தாம்.

❖ நாட்டில் 31 ஐந்து உயர்நிலை விண்மீன் விடுதிகளும், 49 ஐந்து விண்மீன் விடுதிகளும் 47 நான்கு விண்மீன் விடுதிகளும் 117 மூன்று விண்மீன் விடுதிகளும் உள்ளன.

❖ உலகில் ஏறத்தாழ 3 கோடி மக்கள் தொழுநோய் (குஷ்ட்ட-ரோகம்) கண்ட மக்கள் உள்ளனர்.

❖ பெண்களை விட ஆண்களுக்கே தலை மிகுதியும் வழுக்கை விழுகிறது. இதற்கு இன்னும் விளக்கம் கண்டுபிடிக்கவில்லை. இருப்பினும் முடிவளர்ச்சிக்குரிய 'ஈஸ்டுரோஜன்' என்னும் வேதியல் பொருள் பெண்களின் குருதியில் மிகுந்திருப்பதும் ஒரு காரணம் என்று கருதப்படுகிறது.

❖ 1931-இல் தான் பேசும் திரைப்படங்கள் வந்தன. அதற்கு முன்னர் ஊமைப் படங்கள் தாம் காட்டப்பட்டு வந்தன.

❖ தமிழகத்தில் 29,997 தொடக்கப்பள்ளிகள் உள்ளன. அவற்றில் 71,336 ஆண் ஆசிரியர்களும், 48,585 ஆசிரியைகளும் பணி செய்கின்றனர். இவர்களுடன் ஏறத்தாழ 40,000 ஆசிரிய ஆசிரியைகள் ஆசிரியப் பயிற்சி முடிந்து வேலையில்லாமல் உள்ளனர்.

26. இஸ்பெயின் (SPAIN)—முடியரசு

நிலப்பரப்பு : 5,04,782 ச. அ. மா.
மக்கள் தொகை : 3,88,20,000
மக். தொ. பெ: 1.0°/.
மக். வா. எ: ஆண்: 70, பெண்: 76 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 97°/.
தலைநகர் : மேட்ரிட் (Madrid)
மொழி : ஸ்பானிஷ் (Spanish), கேட்டலன் (Catalan), பாஸ்கியு (Basque)
நாணயம் : ஸ்பானிஷ் பெசட்டா (100 Centimos)

27. அண்டோரா (ANDORRA)—தலைமையர் ஆட்சி

நிலப்பரப்பு : 453 ச. அ. மா.
மக்கள் தொகை : 41,600
மக். தொ. பெ: கிடைக்கவில்லை.
மக். வா. எ: ஆண்: 70, பெண்; 76 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 100°/.
தலைநகர் : அண்டோரா லாவெல்லா (Andora Lavella)
மொழி : கேட்டலன் Catalan)
நாணயம் : பிரெஞ்சு பிராங்க், ஸ்பானிஷ் பெசட்டா.

28. சான் மாரினோ (SAN MARINO)—குடியரசு

நிலப்பரப்பு : 61 ச. அ. மா.
மக்கள் தொகை : 22,000
மக். தொ. பெ: கிடைக்கவில்லை
மக். வா. எ: ,,
எழுத்தறிவு : கிடைக்கவில்லை
தலைநகர் : சான் மாரினோ
மொழி : இத்தாலியன்
நாணயம் : இத்தாலியன் லிரா = 100 சென்டிசியன்

29. வாட்டிகன் நகர் நாடு (VATICAN CITY STATE)

நிலப்பரப்பு : 44 ச. அ. மா.
மக்கள் தொகை : 1000
மக். தொ. பெ; —
மக். வா. எ: —
எழுத்தறிவு : —
தலைநகர் : —
மொழி : இத்தாலியன்
நாணயம் : லிரா (100 சென்டிசியன்)

ஐரோப்பிய நாடுகளில் தமிழர்கள்!

தமிழர்கள் பிரான்சில் ஓர் இலக்கமும், சுவிட்சர்லாந்தில் பத்தாயிரமும், செர்மனியில் பதின்மூவாயிரமும், நார்வேயில் ஐயாயிரமும், டென்மார்க்கில் மூவாயிரமும், சுவீடனில் ஆயிரமும் பல தொழில்களில் ஈடுபட்டு வாழ்ந்து வருகின்றனர். தமிழ்க்குடும்பங்கள் குறைவு. ஆனால் தமிழ் இளைஞர்கள் தனியராக வாழ்வதே மிகுதி.

செய்தி : இரா. நா. வீரப்பன் (24-7-91)

தெரிந்து கொள்ளுங்கள்

- பலாப்பழத்தின் சுளைகளுக்கு நடுவில் உள்ள பூ நார்களுக்குத் தமிழில் பூந்தை என்று பெயர்; நெல்லைப் பகுதிகளில் சிற்றூர்புற மக்களிடை இச்சொல் வழங்குகிறது.
- ஆங்கிலத்தில் Picnic என்பதற்குத் தமிழில் சிற்றுலா என்றும், Tour என்பதற்குச் சுற்றுலா என்றும் சொல்லுதல் வேண்டும்;
- குளியல் சோப் (Bathing Soap) என்பதைத் தமிழில் வழலை என்றும், துணிக்குப் போடுவதை (Detergent) சவர்க்காரம் என்றும் கூறுதல் வேண்டும்;
- புத்தர் புகட்டிய அறக்கோட்பாடுகள் ஐந்து (பஞ்ச சீலங்கள்); அவை கொல்லாமை, கள்ளாமை, காமமின்மை, பொய்யாமை, கள்ளுண்ணாமை என்பன; இவை பொதுமக்களுக் குக் கூறப்பெற்றவை;

  இவையன்றித் துறவியர்க்குச் சிறப்பாக மேலும் ஐந்து அறக்கோட்பாடுகளும் அவரால் வலியுறுத்தப் பெற்றன. அவை, பொன், வெள்ளி, போன்றவற்றைத் தீண்டாமை, கதிரவன் தோற்றத்திற்கு முன் உண்ணாமை, ஆடல், பாடல், கூத்து போன்றவற்றில் நாட்டம் கொள்ளாமை, மாலைகள், மணப்பொருள்கள் போன்றவற்றில் ஒப்பனை செய்து கொள்ளாமை. இப் பத்து ஒழுக்க நெறிகளும் தச சீலங்கள் என்று கூறப் பெறுகின்றன.
- தன் காதல் மனைவி மும்தாஜுக்காக, தாஜ்மகால் கட்டிய ஷாஜகானுக்கு, மும்தாஜ் தவிர முந்நூறு காதற்கிழத்திகளும் இருந்தனர்;
- சென்னை நகரில் மட்டும் ஆண்டுக்கு 5000, 6000 சாலை ஏதங்கள் (விபத்துகள்) நேரிடுகின்றன: இவற்றால் 350 முதல் 450 பேர்கள் வரை இறந்து போகிறார்கள். அஃதாவது ஏறத்தாழ ஒரு நாளைக்கு ஒருவர் இறக்கிறார்.
- ஃ துளசியில் நல்ல துளசி, கருந்துளசி, செந்துளசி, நாய்த்துளசி, நிலத்துளசி, கல்துளசி, முள்துளசி, எலுமிச்சை துளசி, நிலைத்துளசி என ஒன்பது வகை உண்டு. இவை ஒவ்வொன்றும் சில குணத்திலும் மருத்துவப் பயனிலும் மாறுபட்டது.
- ஃ பெரும்பாலும் பருத்தித்துணிகளைப் பூச்சிகள் அரிப்பதில்லை; இந்தியாவில் 60 க்கும் மேற்பட்ட பருத்தி வகைகள் பயிரிடப் பெறுகின்றன.
- ஃ உலகில் விளையும் தேயிலையில் ஏறத்தாழ பாதிக்குமேல் இந்தியாவில் விளைகிறது. அதிலும் 52 முதல் 55 விழுக்காடு அசாமில் மட்டும் விளைகிறது.
- ஃ அமெரிக்காவில் மருத்துவமனைகளுக்குத் தேவையான சிறுநீரகங்கள், நெஞ்சாங்குலைகள் (இருதயங்கள்), ஈரல்கள், கணையங்கள், நுரையீரல்கள், கண்கள் ஆகியவை போன்ற மாந்த உறுப்புகளை விற்பனை செய்யும் நிலையங்கள் ஏராளமாக உள்ளன;

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005; (தமிழகம்)